வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 22 of 2017

வழக்கு சாட்சி - PW 3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. செல்வராஜ் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | கிருஷ்ணமூர்த்தி | வயது | : | |
| கிராமம் | : | கொடுவாய் | | | |
| தாலுக்கா | : | திருப்பூர் தெற்கு | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 09.07.2025.

(எதிரி ஆஜர்.).

**முதல் விசாரணை தொடர்ச்சி :** **நாள் : 09.07.2025.**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு ரியல் எஸ்டேட் தொழில் வருகிறேன். கடந்த 24.01.2012 ஆம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு மேல் கொடுவாய் பஸ் ஸ்டாப் அருகில் நானும் துரைசாமியும் நின்றுக்கொண்டிருந்தோம். அப்போது அவிநாசிபளையம் காவல் ஆய்வாளர் ஒரு திருட்டு வழக்கு சம்மந்தமாக ஒரு நபரை பிடித்திருப்பதாகவும் அதற்கு சாட்சியாக இருக்கும் படி ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்கு இனங்க சாட்சி கையொப்பம் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த முதலாவது சாட்சி கையொப்பம் மட்டும் **அ.த.சா.ஆ.2** ஆகும் . அப்போது போலீசார் விசாரணையின் போது ஒரு நபர் பணம் ரூ.600 எடுத்து கொடுத்த அதற்கு சாட்சியாக சாட்சி கையொப்பம் செய்தேன். முதலாவது சாட்சி கையொப்பம் மட்டும் **அ.த.சா.ஆ.3** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>அரசுதரப்பில் சாட்சி அரசுதரப்பிற்கு விரோதமாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியாக கு.வி. செய்ய அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.</u>**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

1) கேள்வி : போலீசார் விசாரனையின் போது 24.01.2012 ஆம் காலை 10.00 மணிக்கு அவிநாசிபாளையம் காவல்ஆய்வாளர் இவ்வழக்கின் எதிரியை பிடித்து விசாரனை செய்தபோது உடனிருந்ததாகவும் அவ்ர தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றதில் அந்த ஒப்புதல்வாக்குமூலத்தில் 22.01.2012 ஆம் தேதி மாலை 7.00 மணிக்கு கருணம்பாளையம் பிரிவில் டீ கடை சேகர் வீட்டில் ரூ.4000 திருடியதாக ஒப்புக்கொண்டு வாக்குமூலம் கொடுத்தார் என்று அதன் அடிப்படையில்அவர் தன்னிடம் இருந்து ரூ.600 பணத்தை எடுத்து ஆஜர் படுத்தினார் என்றும். அதை போலீசார் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள். சாட்சியாக இருந்து சாட்சி கையொப்பம் செய்து விட்டு உண்மையயை மறைத்து பொய்யாக சாட்சி அளித்தேன் என்றால்

பதில் : சரியல்ல.

குறுக்கு விசாரணை இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2025.07.09 18:28:42 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.